செய்தி வெளியீடு எண்– 334 நாள்– 16.5.2008

# செய்தி வெளியீடு

## கழுத்துவலி மற்றும் முதுகுவலி சிகிச்சைக்காக முதல்வர் கலைஞர் மருத்துவமனையில் அனுமதி. நிதியமைச்சர் பேராசிரியர் க.அன்பழகன் வேண்டுகோள்!

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் கடந்த சில நாட்களாகக் கடுமையான கழுத்துவலி மற்றும் முதுகுவலியினால் பாதிப்புக்குள்ளாகி இருந்தார். மருத்துவமனையில் சிலநாட்களேனும் தங்கியிருந்து உரிய சிகிச்சையைப் பெற வேண்டுமென்று மருத்துவ நிபுணர்கள் வலியுறுத்திச் சொன்னதன் காரணமாக – மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் இன்று போரூர் இராமச்சந்திரா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். எனவே, சிகிச்சை நிறைவடைந்து திரும்பும்வரை அவரை யாரும் தொந்தரவு செய்திட வேண்டாம் என்றும்; அவர் நலம் பெற முழு ஒத்துழைப்பை நல்கிட வேண்டுமென்றும் அனைவரையும் வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

*****

வெளியீடு– இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.